III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
MCOP.No.72/2024

Deposition of witness for the Petitioner/PW3
Respondent solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 18-07-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துசாமி | Village | : |
| Father's Name | : சேரந்தையன் | Calling | : |
| Age | : 51 | Taluk | : |

முதல் விசாரணை

நான் தற்போது ஆவடி போக்குவரத்து புலனாய்வு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இந்நீதிமன்றத்திலிருந்து சாட்சிக்கான அழைப்பாணை கிடைக்கப்பெற்றதன் பேரில் சாட்சியம் அளிக்க முன்னிலை ஆகி இருக்கின்றேன். ஆவடி போக்குவரத்து காவல் நிலைய குற்ற எண்.688/2023 வழக்கில் இறந்துபோன கணபதியினுடைய பிரேத பரிசோதனை அறிக்கை ம.த.சா.ஆ.12 மற்றும் குற்ற இறுதி அறிக்கை ம.த.சா.ஆ.13 , மாதிரி வரைபடம் ம.த.சா.ஆ.14 எதிரி லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.த.சா.ஆ.15 மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ம.த.சா.ஆ.16 யை தாக்கல் செய்கின்றேன். இவ்வழக்கின் இறுதி அறிக்கை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கின் நேரடியாக பார்த்த சாட்சிகளை விசாரணை செய்யாமல் நாங்களாக சாட்சிகளை தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புலனாய்வை நான் செய்யவில்லை. கோப்பில் உள்ள ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் இறுதி அறிக்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை காட்ட எந்த ஆவணமும் இல்லை.

மறுவிசாரணை இல்லை.